www.Padasalai.Net www.TrbTnpsc.com

# பெருமாள் திருமொழி

வகுப்பு 10

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# கற்றல் விளைவுகள்

- அறிவியல் கருத்துக்கள் உட்பொதுந்துள்ள செய்யுள்களின் கருத்து வெளிப்பாட்டு திறனை படித்து உணர்ந்து எதிர் வினையாற்றல்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பெருமாள் திருமொழி நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் ஐந்தாம் திருமொழியாக உள்ளது.
105 பாடல்கள் உள்ளன.

பாடியவர் - குலசேகர ஆழ்வார்.

காலம் - எட்டாம் நூற்றாண்டு.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com





Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com





Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com





Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளா துயர்தரினும் வித்துவக்கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே

. பாசுர எண் -691

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# சொல்லும் பொருளும்

1. சுடினும் - சுட்டாலும்
2. மாளாத - தீராத
3. மாயம் - விளையாட்டு

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# வித்துவக்கோடு

- கேரள மாநிலம்
- பாலக்காடு மாவட்டம்
- இறைவன் - உய்ய வந்த பெருமாள்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# தமிழர் மருத்துவமுறைக்கும் நவீன மருத்துவ உள்ள வேறுபாடு

ontent

:தமிழர் மருத்துவம்

- தமிழர் மருத்துவமுறை என்பது சித்த மருத்துவம் ஆகும்
- தாவரம், விலங்கு, உலோகம் அதாவது பஞ்சபூதங்கள் எல்லாம் மனித நலனுக்காக பயன்படுவன என்பது சித்த மருத்துவத்தின் கோட்பாடு
- .தமிழர்கள் நோயைச் சரிப்படுத்த இயற்கை தரும் இலை, காய், கனிகளிலிருந்தே மருந்தைக் கண்டனர்.
- வாதம், பித்தம், சீதம் இவை மூன்றும் சமநிலையில் இருந்தால் நோய் நம்மை நாடாது
- தமிழர் மருத்துவமுறையில் பக்க விளைவுகள் ஏதுமில்லை

. குணமாவதற்குச் சில நாட்கள் ஆனாலும் மீண்டும் அந்நோய் நம்மைத் தாக்காது.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

.

# நவீன மருத்துவம்:

அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப, மருத்துவத்துறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகிறது. அறிவியல் முறையில் சுகமளித்தவர்களில் சிறந்தவர் ஹிப்போகிரேடஸ்.

நவீன மருத்துவ முறையினால் பக்க விளைவுகள் ஏற்படுவதற்குச் சாத்தியக்கூறுகள் உண்டு.

நோய்கிருமிகள் உடனடியாக அழிக்கப்படுகின்றன. நோயைக் குணப்படுத்த முடியாது. ஆனால் இவ்வகை மருத்துவத்துறையில் கவனக்குறைவு ஏற்பட்டால் உயிர் இறுதியாகிவிடும்.

உதாரணமாக, குருதி ஏற்றும்போது தொடர்புடையவரின் குருதி ஒரே இனமாக இருக்க வேண்டும். இவையெல்லாம் பரிசோதனை செய்து நோயாளியைக் குணப்படுத்த **வேண்டும்**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

நன்றி

புகழேந்தி புலவர் அரசு மேல்நிலைப் பள்ளி

பொன் விளைந்த களத்தூர் செங்கல்பட்டு

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com